
THE MADRAS JUNIOR



జూలై 1955



Certificate of GOLD MEDAL awarded to the Red Cross Sub-Branch, Kumbakonam for its best demonstration at the Municipal Masi Makam Exhibition.

Spittoon and Road Sense Campaign organised by the Junior Red Cross Sub-Committee, Coimbatore.




Spittoon Campaign : A Volunteer at work holding a poster at a street corner




Road Sense : Juniors at work controlling traffic at busy road junction


Hindu Aided Elementary School, Kodingipatti, Palni Taluk, feeding its children out of the rice received as gift from UNICEF.



Children are in a queue and receive the cooked food as their mid-day meal



Children enjoying their food



அன்பார்ந்த ஜூனியர்களே,

உங்களில் அனைவரும் கோடைகால விடுமுறையைச் சந்தோஷமாகக் கழித்திருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் புதிய ஆரோக்கியத்துடனும், பலத்துடனும், வருகிற வருஷத்தில் உங்களுடைய ஜூனியர் ரெட் கிராஸ் சம்பந்தமாகச் செய்யவேண்டிய புதிய கருத்துக்களுடனும் பள்ளிக்கூடங்களில் சேர்ந்திருக்கின்றீர்கள் என்று நான் நம்புகிறேன்.

உங்களில் எத்தனை பேர் ஜூனியர் ரெட்கிராஸிற்காக என்னென்ன காரியங்கள் செய்திருக்கின்றீர்கள் அல்லது விடுமுறை நாட்களில் பொதுவாக என்னென்ன ரெட்கிராஸ் சேவைகளைச் செய்திருக்கிறீர்கள் அல்லது பற்பல இடங்களில் காணப்படும் ரெட்கிராஸ் சின்னங்களைக் (Sign) கவனித்திருக்கிறீர்கள் என்பதைப் பற்றி நான் திட்டமாகக் கூற முடியவில்லை. பஸ்களில் வைத்திருக்கும் முதல் உதவிப் பெட்டிகளின்மேல் குறித்துள்ள அடையாளத்தை உங்களில் சிலர் பார்த்திருப்பீர்கள். கோயம்புத்தூரிலிருக்கும் ஜூனியர்களைப் போல, பெரிய காட்சிச் சாலைகளிலுள்ள ரெட்கிராஸ் கடைகளை மற்றவர்கள் பார்த்திருக்கலாம். உங்களுடைய தேக ஆரோக்கியத்தைக் கவனித்துக்கொள்வது, நோயாளிகளுக்கும், துன்பம் அடைந்தவர்களுக்கும் உதவி செய்வது, சர்வதேச சகோதரப் பற்றை (International friendliness) அதிகரிக்கச் செய்வது ஆகிய ஜூனியர் ரெட்கிராஸின் மூன்று நோக்கங்களே ஜூனியர்களின் இன்றியமையாத கடமைகள் என்பதை ரெட்கிராஸ் அடையாளத்தைப் பார்க்கும்பொழுதெல்லாம் ஞாபகப்படுத்திக்கொள்வீர்கள் என்று நான் திடமாக நம்புகிறேன்.

ரெட்கிராஸ் ஸ்தாபகர் ஹென்றி டியூனண்டின் (Henry Dunant) பிறந்த நாளாகிய மே மாதம் 8-ஆந்தேதி ரெட்கிராஸ் தினத்தன்று ஓர் இடத்தில் நடந்த ஊர்வலத்தில் ரெட்கிராஸ் ஜூனியர்களும், பள்ளிக்கூடச் சிறுவர்களும் கலந்துகொண்டதை நான் பார்த்தேன். அச்சிறுவர்கள் அந்த நிகழ்ச்சியை மட்டில்லாத மகிழ்ச்சியுடன் கொண்டாடி, பிறருக்குச் சேவை செய்ய வேண்டும் என்னும் எண்ணத்துடன் வீட்டிற்குத் திரும்பியிருக்கின்றார்கள் என்று நிச்சயமாக எண்ணுகிறேன். ஏனென்றால், '**என் கடன் பணி செய்து கிடப்பது**' என்பதே ஜூனியர் ரெட்கிராஸின் குறிக்கோளாகும்.

வரப் போகின்ற ஆண்டில் நீங்கள் செய்யவேண்டிய காரியங்களுடன், '**இளமைப் பருவத்தில் புகைப் பிடித்தலைத் தடுக்கும் இயக்கத்**'தையும் நடத்த வேண்டும் என்று நான் மிகவும் விரும்புகிறேன். உலக முழுவதும் பரந்த இவ்வியக்கத்தில் இந்தியநாடு அதனுடைய பகுதியைச் செய்வதற்குத் திட்டமிட்டிருக்கிறது. இவ்வியக்கத்தை நடத்தத் தகுந்த சிறந்த வீரர்கள் நாடு முழுவதிலுமுள்ள ஜூனியர்களேயல்லாமல் வேறு யாரும் இல்லை என்று புது டெல்லியிலுள்ள இந்திய ரெட்கிராஸ் தலைமைக் காரியாலயம் நினைக்கிறது. புகை (பீடி, சிகரெட்டு) பிடித்தலினால் உண்டாகும் அபாயங்களை நீங்கள் தினசரிப் பத்திரிகைகளில் படித்திருக்கலாம். 'கான்சர்' (Cancer) என்னும் நுரையீரல் புற்றுநோய் அவ்வபாயங்களில் முக்கியமானது. சிறுவர்களில் பலருக்கு இந்நோயின் அபாயத்தைப் பற்றித் தெரியாது. புகை (சிகரெட்டு) பிடித்தல் மனிதத் தன்மையாகும் என்று அவர்கள் நினைக்கின்றார்கள். இதனால் நாளடைவில் சிறிது சிறிதாக அவர்கள் பல வியாதிகளுக்கு உள்ளாகிறார்கள்; இத்தகைய நீண்டகால அபாய நோயைத் தவிர, சந்தோஷ வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத திட ஆரோக்கிய சந்தோஷ வாழ்க்கையையும் இழந்துவிடுகிறார்கள். ஆகையினால், ஜூனியர்களாகிய நீங்கள் அத்தகையச் சிறுவர்களுக்குச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நல்ல புத்திமதிகளைச் சொல்லி, இந்தக் கொடிய பழக்கத்தை விடச் செய்து, அவர்களைக் காப்பாற்ற வேண்டும். எனவே, இந்த வழிகளில் உங்களுடைய நண்பர்கள் அல்லது சுற்றத்தார்கள் ஆகியவர்களின் விலைமதிக்க வொண்ணாத உயிர்களை நீங்கள் காப்பாற்றுபவர் ஆவீர்கள்.

இக்கொடிய பழக்கத்தை விட்டுவிட வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லுவது மாத்திரம்

போதாது. ஆரோக்கிய விளையாட்டுக்களிலும், பாடல்கள் நடனங்கள் முதலிய உங்கள் தொகுதிகளின் சந்தோஷப் பொழுது போக்குகளிலும் உங்களுடன் அவர்களையும் ஈடுபடும்படிச் செய்ய வேண்டும். அவ்வாறு அவர்களை ஈடுபடுத்தினால்தான் சிறுவர்களில் பெரும்பாலோர் செய்வதைப் போல அவர்கள் தனியாகச் சென்று, இரகசியமாய்ப் பீடியோ அல்லது சிகரெட்டையோ பிடிக்க முடியாது. இவை சுகாதாரத்திற்குக் கெடுதி தருவதோடல்லாமல் செய்வதற்கு வெட்கக்கேடான செய்கையாகவும் உங்களுக்குத் தோன்றுகிறதல்லவா! ஆகையினால், உங்களால் கூடுமானவரையில் இத்தீய பழக்கத்திலிருந்து அவர்களை விடுவிப்பதற்குவேண்டிய உதவியைச் செய்யுங்கள்.

இத்தகைய பிரசாரத்திலும், வருங்காலத்தில் செய்யப் போகும் சேவைகளிலும் நீங்கள் வெற்றியடையுமாறு நான் விரும்புகிறேன்.

உங்களுடைய,
சேவையிலிருக்கும்
T. P. சந்தானகிருஷ்ண நாயுடு

இந்திய ரெட்கிராஸின் நிவாரணச் சேவைகள்

எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி அஸ்ஸாம், பீஹார், மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம் ஆகிய இடங்களில் வெள்ளத்தினால் துன்பமடைந்தவர்களுக்காக நன்கொடைகள் அனுப்பின ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதிகளுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். சில தொகுதிகள் பணம் அனுப்பினதுமட்டுமல்லாமல், அந்தந்தத் தகுதியான இடங்களுக்கு அனுப்புவதற்காகப் பழைய, புதிய துணிகளையும் சேகரித்து எங்களுக்கு அனுப்பின. வெள்ளத்தினால் அதிகமாகச் சேதமடைந்தவைகளையும், அதனால்பாதிக்கப்பட்ட லட்சக்கணக்கான மக்களையும் எண்ணும் பொழுது, நமது தொகுதிகளிடமிருந்து நன்கொடையாக வரப்பெற்றவைகள் மிகவும் குறைவாகயிருக்கின்றது ; அவ்வாறு இருந்த போதிலும் அளவுகளைச் சிறிதும் கருதாமல், சேவை செய்ய வேண்டும் என்னும் முழு எண்ணத்துடன் சேவை செய்ததே மிகவும் சிறந்த சுபாவமாகும். குறைந்த அளவுள்ள நன்கொடைகளுங்கூட இரண்டு வகைகளில் விலை மதிப்புடையவைகளாய் இருக்கின்றன. முதலாவது, அவைகள் அளவுகளில் மிகக் குறைவாய் இருந்தாலும், அவைகளையெல்லாம் ஒன்று சேர்க்கும்பொழுது பெரும் அளவாயிருக்கின்றன. இரண்டாவது, சங்கத் தொகுதிகளை ஆதரித்து, சேவை செய்ய வேண்டும் என்னும் பழக்கமும், ஊக்கமும் இருப்பதேயாகும். ஆகையினால், எல்லாச் சங்கத் தொகுதிகளும் வழங்கின உபயோகமான நற்காரியங்களுக்காக மற்றொரு முறையும் நாங்கள் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அபாய காலங்களில் ரெட்கிராஸின் நடைமுறைகளின் ஒரு பகுதியைப் பெரும்பாலான சங்கத் தொகுதிகள் முழுவதும் தெரிந்துகொள்ளவில்லை. ஆகையினால், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஜனங்களுள்ள இடங்களுக்குத் தலைமைக் காரியாலயத்திலிருந்து ஏராளமாக வந்து குவிந்துள்ள நன்கொடைகளின் விவரங்களை அறிந்துகொள்ள நமது சங்கத் தொகுதிகள் மிகவும் ஆவலாயிருக்கும். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வழங்கப்பட்ட லட்சக்கணக்கான மதிப்புள்ள நிவாரணப் பொருள்களில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

Multivitamin Tablets	...	18,25,000
Sulphaguanidine ,,	...	4,10,000
Sulphathiazole ,,	...	1,60,000
Mepacrine ,,	...	59,000
Penicillin vials	...	17,186
டிங்சர் ஐயோடின் (lbs)	...	120
Sulphadiazine Tablets	...	93,000
Atebrine Tablets	...	1,25,000
Chloromycellin (Cap.)	...	14,000
Auremycin (Cap.)	...	4,500
Skimmed milk powder (lbs)	...	3,60,500
Multipurpose food (lbs)	...	8,218
ஜாம் டின்கள்		800
CARE ஆகாரப்பொட்டலங்கள்		112
படுக்கை உறைகள் (எண்ணிக்கை)		4,180
கம்பளங்கள் (எண்ணிக்கை)		900
வெள்ளை ஷர்ட்டுகள் (பேல்கள்)		30
காக்கி ,, (எண்ணிக்கை)		3,340
மற்ற ஆடைகள் (,,)		23,860
குழந்தை சட்டை (,,)		4,578

அறிவிப்பு-நெ. 1

ஜில்லா ஜூனியர் ரெட்கிராஸ் சப்-கமிட்டிகளின் கன்வீனர்கள் அனைவருக்கும்

விஷயம் :—ஜூனியர் ரெட்கிராஸ்: செய்கைகளின் அறிக்கைகள்

நமது வருஷாந்தர அறிக்கையிலும், சஞ்சிகையிலும் வெளியிடுவதற்கு ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதிகள், தங்களது அலுவல்களின் அறிக்கைகளை அனுப்பாமல் இருப்பது எங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டது. ஆகையால், கமிட்டி, முக்கியமாகக் கனடியன் பரிசுப் பொருள்களைப் பெற்றுள்ள தொகுதிகள் தங்கள் அலுவல்களின் அறிக்கைப் பிரதியைச் சென்னை ராஜ்யக் கல்வி அதிகாரிக்கு (டயரெக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்) அனுப்பும் பொழுது, அதே பிரதிகளைத் தமக்கும் அனுப்புமாறு கேட்க வேண்டும் என்று முடிவு செய்துள்ளது. இதனால் மற்றத் தொகுதிகள் அவைகளின் அலுவல்களின் அறிக்கைகளை அனுப்பக் கூடாது என்பது அர்த்தம் அல்ல. ஜில்லா ஜூனியர் ரெட்கிராஸ் சப்-கமிட்டிகளின் கன்வீனர்கள், ஜில்லாக்களிலுள்ள எல்லா ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதிகளுக்கும் இது சம்பந்தமான சுற்றறிக்கையை விடுமாறு அவரவர்களுடைய சப் கமிட்டிகளின் சேர்மன்களைக் (ஜில்லாக் கல்வி அதிகாரிகள்) கேட்டுக்கொள்ள வேண்டும் என்பது எங்கள் விருப்பம். தம்முடைய மேற்பார்வையில் இருக்கும் பள்ளிக்கூடங்களுக்கெல்லாம் மிகவும் ஊக்கத்தோடு இது சம்பந்தமான அறிக்கை விடுத்த சென்னை ஜில்லாக் கல்விஅதிகாரிக்கு நாங்கள் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மற்ற சப்-கமிட்டிகளின் அங்கத்தினர்கள் தெரிந்துகொள்வதற்காகச் சென்னை ஜில்லாக் கல்வி அதிகாரி விடுத்த அறிக்கையின் நகல் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றது:—

ஜில்லாக் கல்வி அதிகாரி ஆபீஸ்,
சென்னை.

R. C. No. 73E/55, தேதி 5—4—1955.

விஷயம் :—ஜூனியர் ரெட்கிராஸ்-செய்யவேண்டிய காரியங்களைப் பற்றிய அறிக்கை-சேகரித்துக் கொடுத்தல்.

1. சென்னை நகரில் ரெட்கிராஸ் தொகுதிகள் வேலை செய்யும் செகண்டரிப் பள்ளிக்கூடங்களின் தலைமை உபாத்தியாயர்கள் அவர்களது வேலைகளைப் பற்றிய ஆண்டு அறிக்கைகளை ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் மாதக் கடைசியில் சென்னை ராஜ்யப் பிராஞ்சு இந்தியன் ரெட்கிராஸ் சங்கத்தின் காரியதரிசிக்கு இந்த ஆபீஸிற்கு அனுப்பும் பிரதிகளுடன் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

2. மேலும், சங்கம்அழைக்கப்படும் போதெல்லாம் செய்ய வேண்டிய எல்லாக் காரியங்களிலும் ரெட்கிராஸ் தொகுதிகள் பங்கெடுத்துக்கொண்டு, அவைகளைஊக்குவிக்குமாறும் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள்.

(கையொப்பம்) M.D. Sarvar,
ஜில்லாக் கல்வி அதிகாரி, சென்னை

அறிவிப்பு-நெ. 2

ஜில்லா ரெட்கிராஸ் பிராஞ்சுகளுக்கும், ஜூனியர் ரெட்கிராஸ் சப்-கமிட்டிகளுக்கும்

விஷயம் :— ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதிகளை ரெஜிஸ்திரேஷன் செய்துகொள்ளத் தேவையான விவரங்களை அனுப்புதல்

நாங்கள் எங்கள் சஞ்சிகையின் மூலம் பல முறை நினைவுபடுத்தியுங்கூட, இன்னும் சில ஜில்லாப்பிராஞ்சுகளும், சப்-கமிட்டிகளும் ரெஜிஸ்தர் செய்யவேண்டிய சங்கத் தொகுதிகளின் பட்டியலைத் தேவைப்பட்ட விவரங்கள் அனைத்தும் இல்லாமலேயே அனுப்புகின்றன. அவர்கள் கௌரவப் பணியாளர்கள் என்பதும், அவர்களுக்கு வேறு சில அலுவல்கள் உள்ளன என்பதும் நாங்கள் அறிந்த விஷயமாகும். ஆனால் அவர்கள் இப்பணியில் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு, மற்ற பிராஞ்சுகள் செய்வதைப்போல, அவர்கள் இச் சேவையில் சிறிது நேரத்தைச் செலவிட வேண்டும். இதனால் எங்களுக்கு மிகுந்த அனுகூலமும் ரெஜிஸ்தர் புத்தகத்தில் ரெட்கிராஸ் தொகுதிகளின் பெயர்களைத் தேடவும், அவைகள் புதியனவா அல்லது பழையனவா என அறிந்துகொள்ளவும் முடியும். ஆகையினால், ரெட்கிராஸ் பிராஞ்சுகளின் காரியதரிசிகளும்,

ஜில்லாவிலுள்ள ஜூனியர் ரெட்கிராஸ் சப்-கமிட்டிகளும் கீழே குறிக்கப்பட்டுள்ள மாதிரியின்படி எல்லா விவரங்களையும் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்கள். இச்சேவையில் எல்லோரும் ஒத்துழைப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

எண் வரிசை	பள்ளிக்கூட விலாசத்துடன் ரெட்கிராஸ் தொகுதியின் பெயர்	மொத்த எண்ணிக்கை — ஜூனியர் ரெட் கிராஸ் அங்கத்தினர்கள்		மொத்த எண்ணிக்கை — பள்ளிக்கூடம் முழுவதற்கும்		முந்தின வருஷத்தின் ரெஜிஸ்திரேஷன் நெம்பர்	கவுன்சிலர் பெயர்
		சிறுவர்கள்	சிறுமிகள்	சிறுவர்கள்	சிறுமிகள்		

அறிவிப்பு-நெ. 3

அகில இந்திய ஜூனியர் ரெட்கிராஸ் சர்வதேசப் பள்ளிக்கூடக் கலைப்போட்டி—1955

1. ஜூனியர் ரெட்கிராஸுக்குச் சம்பந்தப்பட்ட காட்சிகள், வேடிக்கைக் காட்சிகள், ஊர்த் தோற்றம், ஊரிலுள்ள சுற்றுப்புறக் காட்சிகள், பள்ளிக்கூட வாழ்க்கை, சாதாரண விளையாட்டுகள், பள்ளிக்கூட விளையாட்டுகள், சமூகப் பழக்க வழக்கங்கள், புதிய சர்வதேச உற்பத்தித்திட்டங்கள், மற்றநாடுகளிலுள்ள குழந்தைகள் விரும்பத் தகுந்ததும், இந்தியப் பண்பைத் தெரிவிப்பதுமான சித்திரம் ஆகியவைகளைப் பற்றிப் படங்களையோ அல்லது சித்திரங்களையோ தயாரித்து அனுப்புமாறு போட்டியிடும் ரெட்கிராஸ் தொகுதிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

2. ரெட்கிராஸ் தொகுதி எத்தனை நமூனுக்கள் (entries) வேண்டுமானாலும் அனுப்பலாம்.

3. போட்டியிடும் ஜூனியர் பெயர், விலாசம், வயது, எந்த வகுப்பில் படிப்பது ஆகிய விஷயங்களை ஒவ்வொரு நமூனு(entry)விலும் எழுதவேண்டும்.

4. போட்டி, ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதிகளுக்காக ஏற்பட்டிருப்பதனால், ஒவ்வொரு நமூனுவும் ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதியின் சார்பாகவே அனுப்பப்பட வேண்டும்.

5. ஜூனியராகிய அவன் அல்லது அவளுடைய தொகுதியின் சார்பாக 'அவரவரே செய்த வேலை' யென்று பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயர் ஒவ்வொரு நமூனுவிலும் நிச்சயம்செய்து எழுத (certified) வேண்டும்.

6. எழுதப்படும் படங்களின் அளவுகள் சுமார் 12'' × 9''க்குக் குறையாமலும், 30' × 20''க்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

7. தேர்ந்தெடுக்கப்படும் விஷயம் பொதுவாக நல்ல கருத்துள்ளதாகவும், வர்ணச் சிறப்புடையதாகவும் இருந்தால்தான் சிறப்பிக்கப்படும்.

8. போட்டியின் முடிவைத் தீர்மானிக்கும்பொழுது ஒழுங்காகப் பிறருக்கு விளக்கமாகத் தெரியும்படி எழுதின படங்கள் தனியாகக் கவனிக்கப்படும்.

9. போட்டியிடும் ரெட்கிராஸ் சங்கத் தொகுதிகள் கீழுள்ளவாறு இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படும். அவை :—

A. உயர்தரப் பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும்
B. மத்திய, பிரைமரிப் பள்ளிக்கூடங்கள்

10. தேர்ந்தெடுக்கப்படும் நமூனுக்களுக்குக் கீழ்க்கண்டவாறு பரிசுகள் வழங்கப்படும் :—

A பிரிவில் அடங்கிய நமூனுக்கள் :

முதல் பரிசு ... ரூ. 50/-
இரண்டாவது பரிசு ... ரூ. 30/-
மூன்றாவது பரிசு ... ரூ. 20/-

B பிரிவில் அடங்கிய நமூனுக்கள் :

முதல் பரிசு	...	ரூ. 40/-
இரண்டாவது பரிசு	...	ரூ. 20/-
மூன்றாவது பரிசு	...	ரூ 15/-

இரண்டு பிரிவுகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து நமூனுக்களுக்கு ரூ. 5/- வீதம் ஆறுதல் பரிசுகள் (Consolation Prizes) அளிக்கப்படும்.

11. தேர்ச்சி பெற்ற ரெட்கிராஸ் தொகுதிகளுக்கு அனுப்பப்படும் பரிசுகளைத் தங்கள் விருப்பம் போல அவைகளை உபயோகித்துக்கொள்ளலாம். வெற்றி பெற்ற ரெட்கிராஸ் தொகுதிகள் அப்பரிசுகளை அத் தொகுதியைச் சேர்ந்த போட்டியில் கலந்துகொண்ட தனிப்பட்ட நபர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதில் எத்தகைய தடையும் இல்லை.

12. புது டெல்லியிலுள்ள தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்புவதற்காகக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு நமூனுக்கள் 1955-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ஆந்தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும் :—

" கௌரவ டயெரக்டர்,
ஜூனியர் ரெட்கிராஸ்,
இந்தியன் ரெட்கிராஸ் சங்கம்,
சென்னை ராஜ்யப் பிராஞ்சு,
எழும்பூர், சென்னை-8.

குறிப்பு : போட்டியிடும் தொகுதிகள் தற்பொழுது உள்ள ஜூனியர் ரெட்கிராஸ் ரெஜிஸ்திரேஷன் எண்களை அவைகளினுடைய நமூனுக்களின் மீது குறித்தனுப்ப வேண்டும். அவ்வாறு குறித்தனுப்பாத நமூனுக்கள் தகுதியற்றவைகளாகக் கருதப்பட்டு நீக்கிவிடப்படும்.

ராஜ்யத்திலுள்ள நமது ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து ஒத்துழைத்து, இந்தப் போட்டிக்கு எத்தனை நமூனுக்களை அனுப்பக்கூடுமோ, அத்தனை நமூனுக்களை அனுப்பி ஆதரிக்க வேண்டும். நமது ரெட்கிராஸ் தொகுதிகள் எல்லாம் போட்டியில் சிறப்புடன் வெற்றியடையும் என்பது எமது முழு எண்ணம்.

—பத்திராதிபர், மதராஸ் ஜூனியர்

நமது ஜூனியர் ரெட்கிராஸ் கவுன்சிலர்கள் அனைவருக்கும் சுற்றறிக்கை

விஷயம் :— பாட்டுகள், நடனங்கள், சம்பாஷணைகள், உல்லாசக் கதைகள் முதலியவைகள் அடங்கிய விஷயங்களைச் சிறு புத்தகமாக வெளியிடுவதற்கு ஆலோசனை செய்தல்

நமது நாட்டிலுள்ள ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதிகளின் நன்மைக்காக ஜூனியர் ரெட்கிராஸின் முக்கியக் கருத்துக்களைக் கொண்ட பாட்டுகள், நடனங்கள், சம்பாஷணைகள், உல்லாசக் கதைகள், முதலியவைகளைச் சிறு புத்தகமாக வெளியிடுவதற்குப் புது டெல்லியிலுள்ள தலைமைக் காரியாலயம் ஆலோசித்திருக்கின்றது. இப்புத்தக வெளியீடு நமது நாட்டிலுள்ள வெவ்வேறு பகுதிகளில் அனைவராலும் விரும்பத் தகுந்த பிரயோஜனமான நற்காரியங்களை வெளிப்படுத்தும். ஆகையினால், மேலே கூறியுள்ள விஷயங்களைப்பற்றி அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளத் தகுந்த நடையில் இந்தியிலாவது ஆங்கிலத்திலாவது எழுதி அனுப்பினால் நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாவோம். தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்புவதற்கு அவைகளை எங்கள் காரியாலயத்திற்கு அனுப்ப வேண்டும். தலைமைக் காரியாலயம், அவைகளில் நல்ல கருத்துக்கள் அடங்கியவைகளைத் தேர்ந்தெடுத்த பிறகு, மேலே சொல்லிய இரண்டு பாஷைகளில் அவைகளைச் சிறு புத்தகமாக வெளியிடும். அப்புத்தகம் வெளி வந்தவுடன், ராஜ்யப் பிராஞ்சுகள் தங்கள் தங்கள் ராஜ்ய பாஷைகளில் அப்புத்தகத்தைப் பதிப்பித்துக் கொள்ளலாம் என்று தலைமைக் காரியாலயம் யோசனை கூறுகிறது.

1955-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் கனடாவில் ஒண்டாரியோ என்னும் இடத்தில் சர்வ தேச ரெட் கிராஸ் கண்காட்சிச் சாலையில் வைப்பதற்குத் தயாரித்த பள்ளிக்கூடக் கலைக் காட்சிப் பொருள்கள்.

மேலே உள்ள கண்காட்சிச் சாலை சம்பந்தமாக விடுத்த எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, நமது ராஜ்யத்தைச் சேர்ந்த ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதி களின் அங்கத்தினர்கள் காட்சிப் பொருள்களைத் தயாரித்து அனுப்பி வைத்தார்கள். புது டெல்லியி லுள்ள தலைமைக் காரியாலயம் அவைகளில் நன்ருக இருந்த ஏழு பொருள்களைத் தேர்ந்தெடுத்து, அவை களில் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5/- வீதம் பரிசு கொடுத் தது. அக்காட்சிப் பொருள்களின் விவரங்கள் பின் வருமாறு :—

பள்ளிக்கூடத்தின் பெயர்	ஜூனியரின் பெயர்	காட்சிப் பொருள்களின் விவரம்
1. செயிண்டு ஆன்ஸ் உயர்தரப் பாடசாலை, மங்களூர் (தென் கன்னட ஜில்லா)	B. இந்துமதி, 13 வயது	சமுக்காளத்தில் அல்லது தரையில் தாமரை இதழ்கள் இருப்பது போல ஒரு படம்
2. போர்டு உயர்தரப் பாடசாலை, முன்னல் (Munnal) வடஆற்காடு ஜில்லா	V. A. அருணகிரி, 16 வயது	மலைகளிலிருந்தும் குன்றுகளிலிருந்தும் தண்ணீர் கீழே விழுதல்
3. ,,	K. சந்திரன், 10 வயது	சூரிய அஸ்தமனத்தில் பெண்கள் தண்ணீர் எடுத்துச் செல்லுதல்
4. கவர்ன்மெண்டு செகண்டரி டிரெயினிங் பாடசாலை (பெண்கள்) கோழிக்கோடு, (மலபார் ஜில்லா)	T. பிரபாவதி, 6 வயது	தினசரி வாழ்க்கை
5. ,,	P. வத்சலா, 15 வயது	நெற்பயிர்களை நாற்று நடுதல்
6. ,,	T. மல்லிகா, 16 ,,	வாழைப்பழ சந்தை
7. ,,	M. C. கமலாட்சி, 18 வயது	வனபோஜனம்

பரிசு பெற்றவர்களை வாழ்த்தி, அவர்கள் மேன்மேலும் எதிர்காலப் பிரயத்தனங்களில் தொடர்ச்சியாக வெற்றியடையுமாறு நாங்கள் விரும்புகிறோம்.

நன்கொடைகள்

(1955-ஆம் வருஷம் ஏப்பிரல் மாதத் தொடர்ச்சி)

S. V. C. ஆரம்பப் பாடசாலை, புதூர், ஆறுமுகனேரி (Arumuganeri), திருநெல்வேலி ஜில்லா.
(வெள்ள நிவாரணத்திற்காக) ... ரூ. 1 13 0

செயிண்டு பிரான்ஸிஸ் சேவியர் அநாதை விடுதி, ஆள்வார்பேட்டை, சென்னை-18..
(ரெட்கிராஸ் வேலைக்காக) ... ரூ. 5 0 0

ஆடை வெகுமதிகள்:

1. R. C. செயிண்டு ஸ்டானிஸ்லாஸ் ஆரம்பப் பாடசாலையில் உள்ள ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதி, இருதயபுரம், திருச்சிராப்பள்ளி ஜில்லா ... 30 ஆடைகள்
2. திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற ஜூனியர் ரெட்கிராஸ் கவுன்சிலர்கள் பயிற்சி வகுப்பில் படித்த பயிற்சியாளர்கள் ... 32 ஆடைகள்

மொத்தம் ... 62 ,,

திருச்சிராப்பள்ளி ஜில்லா ரெட்கிராஸ் பிராஞ்சின் கௌரவக் கூட்டுக் காரியதரிசியால் மேலே குறிப்பிட்ட ஆடைகள் எங்களுக்கு அனுப்பப்பட்டன.

நன்கொடையாளர்களுக்கு அவர்கள் அனுப்பின பணம், வெகுமதிப் பொருள்கள் ஆகியவற்றிற்காக நாங்கள் மிகவும் நன்றி செலுத்துகிறோம். அவைகள் எக்காரியங்களுக்காக அனுப்பப்பட்டனவோ, அக் காரியங்களுக்காகவே அவைகளை உபயோகப்படுத்தப் படும்.

—பத்திராதிபர், மதராஸ் ஜூனியர்

சுற்றறிக்கைகள்

• ரெட்கிராஸ் பிராஞ்சுகள், ஜூனியர் ரெட்கிராஸ் சப்-கமிட்டிகள் ஆகியவைகளின் காரியதரிசிகள் அறிந்துகொள்ளும் செய்திக்காகவும், செய்யவேண்டிய காரியத்திற்காகவும் நமது சென்னை ராஜ்யப் பிராஞ்சு இரண்டு சுற்றறிக்கைகள் விடுத்தது. நம்முடைய அங்கத்தினர்கள் அறிந்துகொள்வதற்காக, அவ்விரண்டு சுற்றறிக்கைகளும் கீழே வெளியிடப்பட்டிருக்கின்றன.

அன்புள்ள ஐயன்மீர், அம்மையீர்,

புது டெல்லியிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் மருத்துவப் பரிபாலன தொடர்நிதி (Medical-After Care Fund)யிலிருந்து பெற்ற உதவியைப் பற்றி இந்தியன் ரெட்கிராஸ் சங்கத்தின் ஜெனரல் காரியதரிசியிடமிருந்து வரப் பெற்றதும், 25-4-55-ஆம் தேதியுள்ள MACF—1955 என்னும் எண்ணுள்ளதுமான கடிதத்தின் நகலை நீங்கள் அறிந்துகொள்வதற்காக இதனுடன் சேர்த்திருக்கிறோம்.

இப்படிக்கு உண்மையான,
(கையொப்பம்) C. அமிர்த கணேசன்,
கௌரவக் காரியதரிசி.

புது டெல்லி, தலைமைக் காரியாலயம் இந்தியன் ரெட்கிராஸ் சங்கத்தின் ஜெனரல் காரியதரிசி (Secretary General) யிடமிருந்து வரப் பெற்றதும் 25–4–1955-ஆம் தேதியுள்ள MACF-1955 என்னும் எண்ணுள்ளதுமான கடிதத்தின் நகல்

1941-ஆம் வருஷக் கடைசியில் நிதி ஸ்தாபனம் தொடங்கியதிலிருந்து வியாதியுள்ள இந்திய மாஜி உத்தியோகஸ்தரின் சகாயத்திற்காகச் சங்கத்தின் மருத்துவப் பரிபாலன தொடர்நிதி (Medical-After-Care Fund) ஏற்படுத்தப்பட்டதென்பது உங்களுக்குத் தெரியும். இப்பொழுது இந்த நிதியிலுள்ள பணம் முழுவதும் செலவழிந்து விட்டது. ஆகையினால், அனைவருக்கும் உபயோகமான இப்பணியை மேற்கொண்டு நடத்தக் கவர்ன்மென்டாரிடமிருந்து பண உதவி பெறுவதற்கு முயற்சி செய்திருக்கிறோம். ஆனால், இதுவரையிலும் வெற்றியடையவில்லை.

இந்த நிலைமையில் 1955 ஆம் வருஷம் ஜூன் மாதம் முதல் தேதிக்குப் பிறகு மருத்துவப் பரிபாலனத் தொடர் நிதியிலிருந்து உதவி பெறுவதற்காக வரும் விண்ணப்பங்களை நமது காரியாலயத்திற்கு அனுப்பப் போவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது என்பதை நிர்வாகஸ்தர்கள் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றார்கள். வீரர்கள், மாலுமிகள், ஆகாய விமானிகள் சேர்ந்துள்ள போர்டுகள் இனிமேல் அதனதனுடைய ராஜ்ய Post-war Services Reconstruction நிதிகளிலிருந்து வேண்டிய உதவிகளைப் பெற வேண்டும்.

ஆகையினால், இது சம்பந்தப்பட்ட ஜில்லாப் பிராஞ்சுகள் உள்ளிட்ட எல்லாப் பிராஞ்சுகளுக்கும் இந்தத் தீர்மானத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

* * * *

கௌரவக் காரியதரிசி,
ரெட்கிராஸ் சப்-பிராஞ்சு,
பழனி, (மதுரை ஜில்லா)

அன்புள்ள ஐயன்மீர்,

விஷயம் :—பால் பவுடருக்காகவும், மருந்துக்காகவும் கேட்டுக்கொள்ளுதல்.

குறிப்பு :

1. தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பின 1955-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 29-ஆம் தேதிய உமது கடிதம்.
2. 1955-ஆம் வருஷம் ஏப்பிரல் மாதம் 27-ஆம் தேதியுள்ளதும், 35-RLF-55 எண்ணுள்ளதுமான தலைமைக் காரியாலயக் கடிதம்.

1. மேலே குறிப்பிட்ட தலைமைக் காரியாலயக் கடிதத்தை உங்கள் கவனத்திற்கு வெளிப்படுத்துகிறோம். அக்கடிதத்தில் கேட்டுள்ள விஷயங்களைப் பூர்த்தி செய்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். அவ்வாறு அனுப்பும் கடிதங்கள் எங்கள் சிபாரிசுகளுடன் உடனே தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பப்படும்.

2. இது சம்பந்தமாக, புது டெல்லியிலுள்ள தலைமைக் காரியாலயத்திற்காவது, வெளிநாட்டு ரெட்கிராஸ் சங்கங்களுக்காவது அல்லது ஜினீவாவிலுள்ள (Geneva) சர்வதேசக் காரியாலயத்திற்காவது ஆபீஸ் நடைமுறைப் பிரகாரம் நேராகக் கடிதப் போக்குவரவு நடத்தக் கூடாது என்பதை நாங்கள் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். இனிமேல் அத்தகைய எல்லாக் கடிதப் போக்குவரத்துக்களும் **எங்கள் விலாசத்திற்கே** அனுப்பப்பட வேண்டும்.

3. எதிர் காலத்தில் இம்முறைப்படி சரியாகக் கவனித்து நடந்தால், நாங்கள் மிகவும் சந்தோஷப்படுவோம்.

உங்கள் உண்மையுள்ள
(கையொப்பம்) C. அமிர்த கணேசன்
கௌரவக் காரியதரிசி

ஜில்லா ரெட்கிராஸ், சப்-பிராஞ்சுகள், பிள்ளைப் பேறு விடுதிகள், குழந்தை சம்ரட்சணை விடுதிகள், கன்வீனர்கள், ஜூனியர் ரெட்கிராஸ் சப்க-மிட்டிகள் ஆகியவைகளின் கௌரவக் காரியதரிசிகள் தெரிந்து, அதன் பிரகாரம் நடந்துகொள்வதற்காக மேலே குறிப்பிட்ட 2-ஆம் பாராவிலுள்ள நகல் மாத்திரம் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

* * * *

தொழில் அலவன்ஸ் (Craft Allowance), ரெஜிஸ்திரேஷன் கட்டணங்கள், ஜூனியர் ரெட்கிராஸ் காரியங்களுடன் ஒத்துழைக்குமாறு கல்வி இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு உத்தரவு அளித்தல் ஆகிய விஷயங்களைப் பற்றிய மூன்று அரசாங்க உத்தரவுகள் "மதருஸ் ஜூனியர்" 1954-ஆம் வருஷத்திய அக்டோபர் சஞ்சிகையில் வெளியிடப்பட்டன. அங்கத்தினர்கள் அறிந்துகொள்வதற்காக இதனுடன் இன்னும் இரண்டு அரசாங்க உத்தரவுகள் கீழே வெளியிடப்பட்டிருக்கின்றன :—

சென்னை அரசாங்கம்

சுருக்கம்

கல்வி-ஜூனியர் ரெட்கிராஸ் நடைமுறை - ரெஜிஸ்திரேஷன் - அரசாங்கக் கல்வி ஸ்தாபனங்கள் - அங்கிகரித்தல்.

G. O. Ms. No. *1639, எடுகேஷன், 5—8—1936.*

கீழுள்ளவற்றைப் படிக்கவும் :—

உத்தரவு

ஒவ்வொரு கல்வி ஸ்தாபனமும் இந்தியன் ரெட்கிராஸ் சங்கத்தின் பிராஞ்சாகிய ஜூனியர் ரெட்கிராஸுடன் சேர்ந்துகொள்ளலாம் என்றும், சில்லறைச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டப் பணத்திலிருந்து அங்கத்தினராவதற்குரிய ரெஜிஸ்திரேஷன் கட்டணத்தைக் கொடுக்கலாம் என்றும் அறிவித்த டயரெக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் அவர்களின் அபிப்பிராயத்தை அரசாங்கம் அங்கீகரித்தது.

(அரசாங்க உத்தரவுப்படி, கல்வி மந்திரி சபை & L. S. G.)

(கையொப்பம்) C. H. Masterman

(அரசாங்கக் காரியதரிசி)

(உண்மை நகல்)

* * *

சென்னை அரசாங்கம்

கல்வி, பொது சுகாதார இலாகா

(கல்வி)

G. O. No. *864, 22—4—1937. கல்வி - ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதிகள் -* Local bodies *நிர்வாகத்திலுள்ள செகண்டரி பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் உள்ள ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதிகள் - சேமிப்பு நிதியிலிருந்து செலவு செய்தல் - உத்தரவுகள் பிறப்பித்தல்.*

உத்தரவு No. *864, கல்வி, 22—4—1937.*

தங்கள் நிர்வாகத்திலிருக்கும் கல்லூரிகளிலும், செகண்டரிப் பள்ளிக்கூடங்களிலும் உள்ள ஜூனியர் ரெட்கிராஸ் சங்கத்தின் அதிகாரத்திலுள்ள ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதிகளின் சேமிப்புப் பொது நிதியிலிருந்து எடுத்து, அவைகளுக்காக ஏற்படும் செலவுகளைச் செய்துகொள்ளவும், ஒவ்வொரு கல்வி ஸ்தாபனத்திலும் ரெட்கிராஸ் தொகுதிகளின் ரெஜிஸ்திரேஷன் கட்டணத்தை ஒதுக்கப்பட்ட சந்தேக நிதியிலிருந்து எடுத்துக்கொள்ளவும் ஜில்லா போர்டுகளுக்கும், முனிசிபல் கவுன்சில்களுக்கும் அரசாங்கம் உத்தரவு தந்துள்ளது. தனிப்பட்ட முறையில் வசூல் செய்யப்படும் பணத்திலிருந்து ரெஜிஸ்திரேஷன் கட்டணச் செலவு அல்லாத மற்ற சங்கத் தொகுதிகளின் நிர்வாகச் செலவுகளைச் செய்துகொள்ளலாம்.

(மேன்மை தங்கிய கவர்னர் அவர்களின் உத்தரவுப்படி)

(கையொப்பம்) C. H. Masterman

(அரசாங்கக் காரியதரிசி)

(உண்மை நகல்)

காணமற்போய்விட்டது

நெ. *1*, புளியந்தோப்பு ஹைரோடு, லூதர் போர்டு, சுந்தரபுரம், சென்னை-*12*ல் இருக்கும் G. N. *லில்லி* கமலா என்னும் அம்மையாருக்கு அளிக்கப்பட்டுள்ளதும், எண் *3018*ஐக் கொண்டதுமான பயிற்சி பெற்ற கவுன்சிலர்க்கான **பத்திரம்** (Trained Councillor's Certificate) காணமற்போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேதியிலிருந்து ஒரு மாதம் கடந்தவுடன் 'நகல்' என்று பொறிக்கப்பட்ட புதிய தொரு பத்திரம் அளிக்கப்படும். பிறகு மூலப் பத்திரம் உபயோகப்படாது.

ஜில்லா ரெட்கிராஸ் பிராஞ்சுகள், ஜூனியர் ரெட்கிராஸ் சப்-கமிட்டிகள் முதலியவைகளின் அறிக்கை

தஞ்சாவூர் *(மேற்கு)*

ரெட்கிராஸ் சப்-பிராஞ்சு, கும்பகோணம்

கும்பகோணத்தில் நடந்த முனிசிபல் மாசி மகம் கண்காட்சிச் சாலையுடன் அங்குள்ள நமது சப்-பிராஞ்சு ரெட்கிராஸ் ஒத்துழைத்து, நமது நோக்கங்களையும் முக்கியக் கருத்துக்களையும் கொண்ட சித்திரங்களையும், போஸ்டர்களையும் தயாரித்து, வசீகரிக்கத் தகுந்த முறையில் ஜூனியர் ரெட்கிராஸ் கடைகளைத் திறந்ததைப் பற்றி நாங்கள் மிகவும் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அதற்காக நமது ஜூனியர் ரெட்கிராஸ் காட்சிப் பெட்டியுங் கூடப் பிராஞ்சிற்கு அனுப்பப்பட்டது. கண்காட்சிச் சாலைக்கு விஜயம் செய்பவர்களை வசீகரிக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு, அதில் பல விநோதக் காட்சிப் பொருள்களை வைத்து, கடை மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டு இருந்தது. கண்காட்சிச் சாலை அதிகாரிகள் பிரியப்பட்டு, நமது பிராஞ்சிற்குத் தங்கப் பதக்க நற்சாட்சிப் பத்திரம் வழங்கினார்கள். அவர்கள் வழங்கிய தங்கப் பதக்க நற்சாட்சிப் பத்திரத்தை அப்படியே புகைப்படம் பிடித்து, இச்சஞ்சிகையின் மேலுறைப் பக்கத்தில் (Cover Page) அச்சடித்திருக்கிறோம். எனவே, பிராஞ்சின் அங்கத்தினர்கள் அனைவருக்கும் நாங்கள் நன்றி செலுத்தி, வருங்காலத்தில் அவர்கள் அனைவரும் மேன்மேலும் வெற்றியடையுமாறு வாழ்த்துகிறோம்.

செங்கற்பட்டு

ஜில்லா ஜூனியர் ரெட்கிராஸ் சப்-கமிட்டி, செங்கற்பட்டு

மேலே குறிப்பிட்ட சப்-கமிட்டி மூன்றுவது முறையாக ஜூனியர் ரெட்கிராஸ் கவுன்சிலர்களுக்காகத் தாம்பரத்தில் பயிற்சி வகுப்பு நடத்திற்று. அவ்வகுப்பில் B.T.களும், செகண்டரி, ஹையர் கிரேடுகளுமாக 50 உபாத்தியாயர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. ஜில்லாக் கல்வி அதிகாரியும் (District Educational Officer), சப் கமிட்டியின் தலைவருமாகிய திருமதி S. துரைசாமி அவர்களால் 1955-ஆம் வருஷம் 26-ஆந்தேதியன்று ஷை பயிற்சித் துவக்க விழா தொடங்கப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பாடத் திட்டங்களைக் கொண்டு பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு வாரக் கடைசியில் நடத்தப்பட்டன. அனுபவ ஞானமும், கல்வியறிவுடையவர்களுமான அறிஞர்கள் பயிற்சியாளர்களுக்குச் சொல்லிக்கொடுத்தார்கள். ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதிகள் ஊக்கத்துடன் வேலை செய்வதைப் பயிற்சியாளர்கள் பார்வையிட்டார்கள்; மேலும், சென்னைக் கார்ப்பரேஷனால் நடத்தப்படும் அசோக் விஹாருக்கும், சிசு சம்ரட்சண சாலைக்கும் சென்று, பார்வையிட்டார்கள். பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட எல்லாப் பயிற்சியாளர்களும் இறுதியில் நடத்தப்பட்ட செயல் முறைத் தேர்விலும், எழுத்துத் தேர்விலும் (Practical and written tests) தேர்ச்சியடைந்தார்கள். 1955-ஆம் வருஷம் ஏப்பிரல் மாதம் 20-ஆந்தேதியன்று நடந்த வந்தனோபசாரக் கூட்டத்தில் திருமதி சரோஜனி வரதப்பன் அவர்கள் தலைமை வகித்து, தேர்ச்சியடைந்த பயிற்சியாளர்களுக்கு நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கினார்கள். திருமதி துரைசாமி அவர்கள் தலைவரையும், கூட்டத்திற்கு விஜயஞ்செய்த அறிஞர்களையும், ஜூனியர் ரெட்கிராஸ் கௌரவ டயரெக்டரையும் வரவேற்று, வந்தனோபசாரப் பிரசங்கம் செய்தார்கள். பயிற்சியாளர்களாலும், ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதிகளினாலும் தயாரிக்கப்பட்ட கைத்தொழிற்பொருள்கள், போஸ்டர்கள், சித்திரங்கள் முதலிய கண்காட்சிப் பொருள்களை Mrs. Ida L. Chambers அவர்கள் திறந்து வைத்தார்கள். செங்கற்பட்டு ஜில்லா போர்டுத் தலைவர் திரு R. கோவிந்தராஜலு நாயுடு அவர்கள் தலைமையில் பயிற்சியாளர்களால் வேடிக்கைக் காட்சிகள் நடைபெற்றன. இரண்டு வருஷங்களுக்குள் மூன்றும் முறையாக வெற்றிகரமாய்ப் பயிற்சி வகுப்பு நடத்தினதுடன் அல்லாமல், ஜில்லாவில் சங்கத் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரித்தற்கு மிகவும் ஊக்கம் செலுத்தியதனால் சப்-கமிட்டியின் கன்வீனரும், தலைவரும் பாராட்டப்படுகின்றார்கள்.

கோயமுத்தூர்

ஜில்லா ஜூனியர் ரெட்கிராஸ் சப்-கமிட்டி, கோயமுத்தூர்

1955-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 4-ஆந்தேதியிலிருந்து 9-ஆந் தேதி வரையில் உள்ள ஆறு நாட்கள் சப்-கமிட்டியின் கூட்டுக் காரியதரிசி திரு. S. R. சந்திரன் அவர்கள் மேற்பார்வையினாலும், உபதேசத்தினாலும் மேலே குறிப்பிட்ட சப்-கமிட்டி "Spittoon and Road Sense" இயக்கத்தை வெற்றிகரமாய் நடத்தினதைப் பற்றிச் சந்தோஷத்துடன் அறிவிக்கிறோம். இடையர் தெருவும் (Edayar Street), ரங்கய்ய கவுண்டர் தெருவும் கூடும் இடம் நகரத்தி

லேயே அசுத்த இடங்களில் ஒன்ருக இருந்தது. அவ் விடத்தையே சப்-கமிட்டி நிகழ்ச்சி இடமாகத் தேர்ந் தெடுத்தது. அவ்விடத்தில் ஒவ்வொரு நாள் காலையி லும் கொல்லத்துக்காரர்களும், கூலி வேலை செய்யும் கூலிகளும் (கட்டட வேலையாட்கள்) ஒன்ருகச் சேர் வார்கள். அப்பொழுது அவர்கள் வெற்றிலைப் பாக்கு எச்சிலைத் துப்பி, முழு இடத்தையும் அசுத்தப்படுத்து வார்கள். ஆகையினல், வாலண்டியர்களை அவ்விடத் தில் நியமித்து, வேலைக்காரர்கள் எச்சில் துப்புவது தடுக்கப்பட்டது. நகர பரிபாலனத்திற்குரிய முக்கிய நேர்மையான செயல் எச்சில் துப்பாமல் இருத்தல் என்னும் உணர்ச்சியை அவர்களிடையே உண்டாக்கி, நினைத்த இடங்களில் எச்சில் துப்புதல் மிகவும் அபா யம் என்னும் எண்ணத்தையும் தோன்றச்செய்தது இச் செயல். இதனல், இவ்வியக்கம் மிகவும் வெற்றி கரமாய் நடந்தேறியது என்பது நிரூபிக்கப்படுகிறது. இதைப்போலவே ஜனநடமாட்டம் நெருக்கமாகவுள்ள தெருக்களில் வண்டிப் போக்குவரத்தை ஒழுங்கு செய்ய வாலண்டியர் சிறுவர்கள் நியமிக்கப்பட்டார்கள். ரெட்கிராஸ் அங்கத்தினர்கள், முனிசிபல் அதிகாரிகள், போலீஸ் முதலியவர்களுடைய உதவியினல் இச்சிறு வர்கள் இதையும் வெற்றிகரமாகவே செய்தார்கள். எனவே, இவ்வியக்கத்தில் பங்கெடுத்துக்கொண்டு, இதை வெற்றிகரமாகச் செய்தவர்களுக்கு நாங்கள் நன்றி செலுத்துகிரும். வாலண்டியர்களில் சிலர் சேவை செய்யும்பொழுது அவர்களைப் புகைப்படம் பிடித்து, அப்படங்களை இந்த சஞ்சிகையில் வெளியிட் டிருக்கின்ரும்.

1955-ஆம் வருஷம் மே, ஜூன் மாதங்களில் கோய முத்தூரில் நடைபெற்ற கால்நடைக் காட்சி (Cattle Show)யுடன் அகில இந்திய சுதேசிக் கைத்தொழிற் காட்சியும் நடைபெற்றது அப்பொழுது ஜில்லா ரெட்கிராஸ் அக்காட்சியில் கடை ஒன்றை ஏற்படுத்தி, அதில் ஜூனியர் ரெட்கிராஸ் பொருள்களில் பலவற் றைக் காட்சிப் பொருள்களாக வைத்தது. 1955-ஆம் வருஷம் ஜூன் மாதம் 5-ஆந்தேதியன்று கௌரவ டயரெக்டர் திரு. T. P. சந்தானகிருஷ்ண நாயுடு அவர்கள் அக்காட்சிப் பொருள்களைப் பார்வையிட் டார்கள்.

ஜூனியர் ரெட்கிராஸ் சம்பந்தமான பணிகளைச் செய்வதற்காக ஜூனியர் ரெட்கிராஸ் கவுன்சிலர் களுக்கு உதவி புரிய நகரிலுள்ள உயர்தர, மத்தியப் பாடசாலைகளில் அட்வைஸர்கள் இருக்கவேண்டு மென்பதைக் கோயமுத்தூர் ஜில்லாக் கல்வி அதிகாரி அமுலுக்குக் கொண்டு வந்தார் என்னும் செய்தியுங் கூட எங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

சென்னை

சென்னைக் கார்ப்பரேஷன், சென்னை

சென்னைக் கார்ப்பரேஷனின் நிர்வாகத்திலுள்ள 206 ஆரம்ப, உயர்தர ஆரம்பப் பாடசாலைகளிலும் ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதிகள் தங்கள் சேவை களைத் திறம்படச் செய்தன. 1953-54-ஆம் வருஷங் களில் ரெட்கிராஸ் தொகுதிகளின் ஜூனியர் ரெட் கிராஸ் சேவைகளைப் பற்றிக் கார்ப்பரேஷன் நிர்வாக அறிக்கையில் வெளி வந்துள்ள விஷயங்களை நமது வாசகர்கள் தெரிந்துகொள்வதற்காக அவைகளைக் கீழே பிரசுரிக்கின்ரும்:—

ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதிகள்

இவ்வருஷத்தில் 205 ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதிகள் 16,500 சிறுவர்களுடன் 685 பயிற்சி பெற்ற கவுன்சிலர்களின் மேற்பார்வையில் தங்கள் சேவைகளைச் செய்தன. ஆனல், முன் வருஷத்தில் 179 ரெட்கிராஸ் தொகுதிகள் 12,500 மாணவர்களு டன் 645 பயிற்சி பெற்ற கவுன்சிலர்களின் மேற்பார் வையில் பணிகளைச் செய்தன.

பள்ளிக்கூடப் பிள்ளைகள் சுத்தமாக இருப்பதற் காக, முக்கியமாகச் சேரிப் பிள்ளைகளுக்காக, சோப்பு கள், சீப்புகள், தேங்காய் எண்ணெய் முதலியவைகள் ரெட்கிராஸ் தொகுதிகளுக்கு வழங்கப்பட்டன. பல ரெட்கிராஸ் தொகுதிகள் சேரி சுத்த இயக் கங்களில் பங்கெடுத்து, சேவை செய்தன.

1945-ஆம் வருஷத்திலிருந்து சோப்புகள், தேங் காய் எண்ணெய், டவல்கள் ஆகியவைகளைக் கார்ப்ப ரேஷன் வழங்கி வந்தது. பள்ளிக்கூடங்களில் மாண வர்களின் சுத்தத்தைக் கருதி, சுகாதாரம் பாடத்திட் டங்களில் ஒரு பகுதியாக வகுக்கப்பட்டது. நகரத்தின் பல பகுதிகளிலும் கார்ப்பரேஷன் நிர்வாகத்திலிருக் கும் எணணற்ற பள்ளிக்கூடங்களை யோசிக்கும் இடத் தில், அவைகளில் படிக்கும் மாணவர்களில் பெரும் பான்மையோர் ஏழை குடும்பங்களில் பிறந்தவர்கள். அறிக்கையின்படி பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு ஆரோக்கியப் பழக்கங்களைக் கற்பிப்பதற்காகவும், அவர்களுக்கு வேண்டிய இன்றியமையாதப் பொருள் களை அதிகமாகத் தரவும் 1954-55-ஆம் வருஷத்து பட்ஜட்டில் தனியாக ஒதுக்கப்பட்ட 1500 ரூபாயி லிருந்து 2500 ரூபாய் ஆக அதிகமாயிருக்கிறது.

ஜூனியர் ரெட்கிராஸ் ராலிகள் கார்ப்பரேஷனல் நான்கு இடங்களில் நடத்தப்பட்டன. 3,600 குழந் தைகளும், 450 பயிற்சியடைந்த ஜூனியர் ரெட் கிராஸ் கவுன்சிலர்களும் இந்த ராலிகளில் பங்கெடுத்துக் கொண்டார்கள். ஜூனியர்கள் வெவ்வேறு போட்டி களிலும், ஆல்பங்கள் தயாரித்தலிலும் மிகவும் அக்கரை எடுத்துக்கொண்டார்கள். கார்ப்பரே ஷன் தொகுதிகளுக்கு வழங்குவதற்காகக் கனடியன் ஜூனியர்களிடமிருந்து வரப்பெற்ற ஆறு சிறிய வெகுமதி பார்சல்களை ராஜ்யத் தலைமைக் காரியாலயம் அனுப்பிற்று. தகுதியான ஆறு பள்ளிக்கூடங் களில் அவைகள் விநியோகிக்கப்பட்டன. 1953-ஆம்

வருஷம் அக்டோபர் மாதத்தில் ரெட்கிராஸ் சங்க நகரப் பிராஞ்சினுல் நடத்தப்பட்ட பயலட்டுப் பயிற்சி வகுப்பில் 24 செகண்டரி கிரேடு பயிற்சி பெற்ற உபாத்தியாயர்கள் சேர்ந்து பயிற்சிபெற்றுர்கள். 1953-ஆம் வருஷம் நவம்பர் மாதம் ராஜாஜி ஹாலில் தலைமைக் காரியாலய அதிகாரிகளால் நடத்தப்பட்ட ராலியில் சுமார் 1,250 ஜூனியர்கள் கலந்துகொண்டார்கள். கார்ப்பரேஷன் பள்ளிக்கூடங்களில் உள்ள ஜூனியர்களின் வேலைகளைக் காட்சிப் பொருள்களாக வைப்பதற்குத் தனிமையான கடை அகிலஇந்திய கதர், சுதேசி, கைத்தொழிற் கண்காட்சியின் பரிபாலனத்தில் இருந்தது. ஜூனியர் ரெட்கிராஸ் கவுன்சிலர்களின் கூட்டம் மிகவும் ஊக்கத்துடன் நடந்தேறியது. கார்ப்பரேஷன் பள்ளிக்கூடங்களில் ஜூனியர் நாளையும், ஹென்றி டியூனன்டின் நாளையும் வெகு அக்கரையோடு கொண்டாடினுர்கள். குழந்தைகளின் உபயோகத்திற்காக முதல்-உதவிப் பெட்டிகளும் கத்திரிக்கோல்களும் வழங்கப்பட்டன.

நீலகிரி

கௌரவ டயரெக்டர் திரு. T. P. சந்தான கிருஷ்ண நாயுடு அவர்கள் ஜில்லா ஜூனியர் ரெட்கிராஸ் சப்-கமிட்டியின் தலைவர் திரு. K. M. குடிபி (K. M. Kudibi) அவர்களுடனும், காரியதரிசி திரு. P.K. ரகுநாதன் அவர்களுடனும், மே மாதம் 31-ஆம் தேதியன்று கல்லக்கோரை (Kallakorai village) கிராமத்தில் நடந்த ஜூனியர் ரெட்கிராஸ் கவுன்சிலர் பயிற்சி வகுப்பிற்கு விஜயஞ்செய்தார். இக்கிராமம் உதக மண்டலத்தில் இருந்து $7\frac{1}{2}$ மைல் தூரத்தில் இருக்கிறது. இதுவன்றி, கௌரவ டயரெக்டர் ஜூன் மாதம் முதல் தேதியன்று கண்டல் (Kandal Village) கிராமத்திலுள்ள, ரெட்கிராஸ் நர்ஸரிப் பள்ளிக்கூடத்திற்கும், ஜூன் மாதம் 5-ஆம் தேதியன்று கூனூரிலுள்ள செயிண்டு மேரி உயர்தர ஆரம்பப் பெண்கள் பாடசாலையின் ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதிற்கும் விஜயம் செய்தார்.

ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதிகளிடமிருந்து கிடைத்த செய்திகள்

குறிப்பு: *முன் சஞ்சிகையில் நாங்கள் முக்கிய கருத்தைப் பிரசுரித்திருந்துங்கூடத் தொகுதிகளில் பல, அவைகளின் வேலைகளைப் பற்றிய செய்திகளைப் பிரசுரிப்பதற்கு ரெஜிஸ்திரேஷன் எண்கள் இல்லாமலே, அவைகளை எங்களுக்கு அனுப்பின. இது பற்றி இனிமேல் நாங்கள் மிகவும் கண்டிப்பாக இருப்போம். நமது சஞ்சிகையில் வெளியிடுவதற்காக இனி வரும் செய்திகள் ரெஜிஸ்திரேஷன் எண்கள் இல்லாமல் இருந்தால், அவைகள் கண்டிப்பாகப் பிரசுரிக்கப் போவதில்லை என்று ரெட்கிராஸ் தொகுதிகளுக்கு முடிவாகத் தெரிவிக்கப்படுகிறது.*

—பத்திராதிபர், மதருஸ் ஜூனியர்.

தென்னுற்காடு

போர்டு எலிமெண்டரி பாடசாலை, பின்னல்வாடி (Pinnalvadi), Tinmalai P.O

1955-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 4-ஆம் தேதியன்று இரண்டாவது ஆண்டு விழாவைச் சங்கம் நடத்திற்று உளுந்தூர்ப்பேட்டைப் பகுதிப் பாடசாலைகளின் மேற்பார்வையாளர் திரு. T. K. மாணிக்கம் அவர்கள் தலைமை வகித்தார்கள். அறிக்கை வாசித்து முடித்தபின், திரு. B. மன்னுர் ரெட்டியார் அவர்கள், "ஆரம்பப் பாடசாலையும், பெற்றோர்களின் கடமைகளும்" என்னும் விஷயம் பற்றிப் பேசினுர்கள். பல வேடிக்கைக் காட்சிகள் அங்கத்தினர்களால் காட்டப்பட்டன. அவைகளில் முக்கியமானவை கோலாட்டம், நடனம், ஆரோக்கிய சம்பந்தமான நாடகங்கள். கிராம முனிசிப்பு திரு. • துரைசாமி நாயுடு அவர்கள் சில மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினுர்கள்.

கோயமுத்தூர்

போர்டு ஆரம்பப் பாடசாலை, கன்னிவாடி (Kannivady) via கரூர், தாராபுரம் தாலூக்கா

1955-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 21-ஆந்தேதி ரெட்கிராஸ் தொகுதி திரு. ஷண்முகம் அவர்கள் தலைமையில் வழக்கம்போல மாதாந்திரக் கூட்டம் நடத்திற்று. அக்கூட்டத்தில் அங்கத்தினர்களில் பலர் "சிறிய கதைப் போட்டி" என்னும் பொருள் பற்றிப் பேசினர்.

யூனியன் உயர்தரப் பாடசாலை, கோயமுத்தூர்

1955-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 29-ஆம் தேதி மேலே குறிப்பிட்ட பாடசாலையின் ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதி, ஜூனியர் ரெட்கிராஸ் சப்-கமிட்டியின் கூட்டுக் காரியதரிசி திரு. S. R. சந்திரன் அவர்கள் தலைமையில் வருஷாந்திரநாளைக் கொண்டாடிற்று. பாடசாலையின் தலைமையாசிரியர் திரு. M. J. சற்குணம் அவர்களால் நன்றுகச் சேவை செய்தவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. தலைவர் தமது பேருரையில் பள்ளிக்கூடத்தில் நடந்த சேவைகளைப் பற்றிப் பேசி, ரெட்கிராஸ் தொகுதிகளின் கவுன்சிலர்களின் சேவைகளைப் பாராட்டிப் புகழ்ந்தார்.

சென்னை

ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் ஆரம்பப் பாடசாலை, கிரிப்பித் ரோடு, தியாகராய நகர், சென்னை.

ஓய்வு பெற்ற ஜில்லாக் கல்வி அதிகாரி திரு. C. செல்லம் ஐயங்கார் அவர்கள் தலைமையில் 1955 ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 2-ஆந்தேதியன்று மேலே குறிப்பிட்ட பாடசாலை, ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதி நாளை வெற்றிகரமாகக் கொண்டாடிற்று முன்னுரைக்குப் பின், ரெட்கிராஸ் தொகுதிகளின் வேலைகளைப் பற்றிய அறிக்கையைக் கவுன்சிலர்கள் வாசித்தார்கள். அறிக்கையில் கூறிய

ரெட்கிராஸ் தொகுதி செய்த வேலைகளைப் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(a) வாரக் கூட்டங்களை நடத்தினது

(b) ஒவ்வொரு வாரமும் ஆரோக்கிய விளையாட்டுக்களையும், மற்ற உபயோகச் சேவைகளையும் செய்தது.

(c) பல்வேறு ஜூனியர் ரெட்கிராஸ் வேலைகளைப் பார்த்துக்கொள்வதற்காக ரெட்கிராஸ் தொகுதிகள் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.

(d) காயமுற்ற குழந்தைகளுக்கு முதல் உதவி செய்தது.

(e) ரெட்கிராஸ் வாரத்தைக் கொண்டாடினது.

வேடிக்கைக் காட்சிகள் காண்பித்து முடிந்தவுடன், தலைவர் மாணவர்களில் சிலருக்குப் பரிசுகள் வழங்கினர்.

கார்ப்பரேஷன் D. R. Mixed School, பழைய மாம்பலம், சென்னை

ரெட்கிராஸ் தொகுதி, அயல்நாட்டு ரெட்கிராஸ் தொகுதிகளின் ஆல்பங்களுக்கு மாற்றிக்கொள்வதற்காக ஆல்பம் தயாரித்து அனுப்பிற்று. தொகுதியின் கவுன்சிலர் இரண்டு ஆரோக்கியப் பாட்டுகளைப் பாடி, சஞ்சிகையில் வெளியிடுவதற்காகப் பத்திராதிபருக்கு அனுப்பினர். ஆனால், சஞ்சிகையில் போதுமான இடம் இல்லாமையினால், அப்பாட்டுகள் வெளியிடவில்லை என்று வருத்தத்துடன் தெரிவிக்கப்பட்டது.

மதுரை

இந்து உதவி ஆரம்பப் பாடசாலை, Kodangipatti, பழனி தாலூக்கா

பாடசாலையில் படிக்கும் குழந்தைகளின் மத்தியான சாப்பாட்டிற்காக ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் சகாய நிதி ஸ்தாபன(UNICEF)த்திலிருந்து 5 மூட்டை அரிசியைப் பாடசாலை பெற்றுக்கொண்டது. 1955-ஆம் வருஷம் ஏப்பிரல் மாதம் 4-ஆந் தேதியிலிருந்து சோறு போடுதல் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது புகைப் படம் பிடித்து, அதை இச்சஞ்சிகையில் வெளியிட்டிருக்கிறது.

மேற்குத் தஞ்சாவூர்

உதவி ஆரம்பப் பாடசாலை, நடராஜபுரம், ஆடுதுரை

1955-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 8-ஆந்தேதியன்று நடந்த 28-வது பாடசாலை ஆண்டு விழாவில் ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதியின் அங்கத்தினர்கள் கலந்துகொண்டார்கள் விழா வெற்றிகரமாய் முடிந்ததற்கு அங்கத்தினர்கள் பெரும் உதவி செய்தார்கள். கேட்ட கேள்விகளுக்கு ஜூனியர்கள் பதில் சொன்னதிலிருந்து ரெட்கிராஸ் என்ன என்பதைப் பற்றியும், ஜூனியர் ரெட்கிராஸ் நடைமுறைகளைப் பற்றியும் நன்முக அவர்கள் புரிந்துகொண்டார்கள் என்பது விளங்குகிறது.

திருச்சிராப்பள்ளி

திரு. குலபதி பாலய்ய செகண்டரி பாடசாலை, புதுக்கோட்டை

1955-ஆம் வருஷம் ஏப்பிரல் மாதம் 27-ஆம் தேதியன்று முனிசிபல் கமிஷனர் திரு K. S. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் தலைமையில் ஜூனியர் ரெட்கிராஸ் தொகுதியின் அங்கத்தினர்கள் ஜூனியர் ரெட்கிராஸ் நாளைக் கொண்டாடினார்கள். ரெட்கிராஸ் தொகுதியின் வேலைகளின் அறிக்கை மாணவக் காரியதரிசியால் சமர்ப்பிக்கப்பட்டு, அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அறிக்கையிலுள்ள வேலைகளின் விவரங்கள் பின் வருமாறு :—

1. பாடசாலைக் கட்டடத்தைச் சுத்தமாகப் பார்த்துக்கொள்ளல்.
2. பொது ஜனங்களிடமிருந்து ரூ. 44-ஐயும், 68 பழைய துணிகளையும் நன்கொடையாகப் பெற்று, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக ராஜ்யப் பிராஞ்சிற்கு அனுப்புதல்.
3. காணமற்போன குழந்தைகளைக் கண்டுபிடித்தலுக்கு அவர்களுடைய பெற்றோர்களுக்கு உதவி செய்தல்.
4. காயமுள்ள மாணவர்களுக்கு முதல் உதவி செய்தல்.
5. மருத்துவ சாலைகளுக்குச் சென்று, அங்குள்ள நோயாளிகளுக்குப் பழங்கள் முதலியவைகளை வழங்கல்.
6. அபாயங்களைத் தடுக்க, வண்டிப் போக்குவரத்து அதிகமாயுள்ள நெருக்கடியான இடங்களில் போக்குவரவை ஒழுங்கு செய்ய அங்கத்தினர்களை அனுப்புதல்.
7. ரெட்கிராஸ் தொகுதி நிதியிலிருந்து ஏழை மாணவர்களுக்குப் பண உதவி செய்தல்.

திருநெல்வேலி

S. V. C. ஆரம்பப் பாடசாலை, புதூர், ஆறுமுகனேரி (Arumuganeri)

1955-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 21-ஆம் தேதி ரெட்கிராஸ் தொகுதி அங்கத்தினர்கள் ஆரோக்கிய சம்பந்த பாட்டுகளைப் பாடிக்கொண்டு ஊர்வலமாகச் சென்றார்கள். அவர்கள் ஜனநடமாட்டம் அதிகமுள்ள இடத்தில் நின்றுகொண்டு, ஆரோக்கியத்தைப் பற்றியும், சுத்தத்தைப் பற்றியும் அங்குக் கூடியுள்ள மக்களுக்குப் பிரசங்கம் செய்தார்கள். தொகுதியினர் வெள்ள நிவாரண சேவைக்காக ரூ. 1—13—0 கொடுத்தனர்.

T. D. T. A. ஆரம்பப் பாடசாலை, கள்ளிடைக்குறிச்சி

இத்தொகுதியில் 80 அங்கத்தினர் இருக்கின்றனர். தொகுதியின் பல்வேறு வேலைகளைக் கவனித்துக் கொள்வதற்காக அவர்கள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டார்கள். தொகுதியின் கவுன்சிலரின் மேற்பார்வையில் அங்கத்தினர் காயமுற்றோருக்கு முதல் உதவி செய்தனர். பாடசாலை உபயோகத்திற்காகச் சுத்தமான குடி தண்ணீர், சீப்பு, கண்ணாடி முதலியவைகள் ஏற்படுத்தப்பட்டன. தொகுதி மாதாந்திரக் கூட்டங்களை ஒழுங்காக நடத்தி வருகின்றது.

List of Junior Red Cross Trained Counsellors—continued from APRIL, 1955 Issue.

RAMANATHAPURAM.

2767 J. Raghava Iyengar, Bd. Ele. School, Pandikanmoi.
2768 R. Raman, do.
2769 S. Subramania Iyer, Ele. School, Ramanathapuram P.O.
2770 S. Jayaraman, do.
2771 A. Dhanalakshmi, do.
2772 K. Sabanatesan, do.
2773 N. Kokilambal, do.
2774 N. Panchaksharan, do.
2775 K. Swarnambal, do.
2776 R. Sathiah, do.
2777 S. Lakshmanan, Bd. Ele. School, Devipatnam.
2778 M. Lourdu, Bd. Ele. School, Thinaikulam.
2779 C. Balakrishna Thevar, Bd. Ele. School, Chittarkottai.
2780 K. Ramalingam, do.
2781 S. Murugadoss, do.
2782 R. Andal, Ramanjaneya Ele. School, Ramanathapuram P.O.
2783 J. Srinivasaragavan, Bd. Basic Ele. School, Chakkarakottai.
2784 K. Jothinayagam, R. S. Bd. High School, Paramakudi.
2785 M. Chidambarasubba, do.
2786 R. Arumugam Pillai, Bd. Ele. School, Bogalur.
2787 Palani Sarasvathi, Saraswathi Ele. School, Velipatnam.
2788 K. Ganapathi, do.
2789 S. Dhanalakshmi, D. D. Vinayagar Ele. School, Velipatnam.
2790 N. Pukazhanperumal Pillai, do.
2791 K Arumugam, do.
2792 N. Rathinam, do.
2793 V. Velayutham Pillai, Bd. Ele. School, Madakottai.
2794 V. Nagarathinam, Bd. Ele. School, Ragunathapuram.
2795 D. Pakkiam, Bd. Basic Ele. School, Ramanad P.O.
2796 R. Ramaswami Iyengar, Bd. Ele. School, Theriruveli P.O.
2797 A. M. Ganapathy, Bd. Ele. School, Bogalur.
2798 S. Mariamichel, Bd. Ele. School, Theruruveli.
2799 K. Natarajan, Hr. Ele. School, Mandapam Camp.
2800 R. Rajagopalraju, do.
2801 M. Gurusamy Naidu, Bd. Ele. School, Alankulam.
2802 S. Samiyya Pillai, Aided Ele. School, Karaikudi.
2803 S. Perumal Pillai, Bd. Ele. School, Peruvayal.
2804 M. Subramaniam Servai, Bd. Ele. School, Uchipulli P.O.
2805 M. Velusamy, Bd. Ele. School, Periapatti.
2806 A. P. Nagasundaram Pillai, Muslim Ele. School, Abiraman.
2807 M. Pandian, do.
2808 K. S. Narayanan, Bd. Hr. Ele. School, Abiraman.
2809 P. Rathinam, do.
2810 K. Lakshmanier, do.
2811 R. Narayanan, Bd. Ele. School, Kamankottai.
2812 S. Subba Rao, R. S. Bd. High School, Paramakudi.
2813 Syed Abu Thahir, No. 1, Bd. Ele. School, Eravadi.
2814 A. Mohamed Hussain, Bd. Ele. School, Eravadi.
2815 S. Mari Ammal, do.
2816 M. Ameena Bevi, do.
2817 A. Gnanamuthu Pillai, Pallivasal Compound, Bd. Ele. School, Alagankulam.
2818 N. Balachandran, do.
2819 S. Ramalingam, Bd. Ele. School, Panikikanmoi.
2820 Subidha Beevi, Pallivasal Bd. Ele. School, Alangankulam.
2821 I. Manickammal, do.
2822 L. Sella Swamy, Aided Muslim School, Panaikulam
2823 T. Somasundaram, Bd. Ele. School, Kalaiyur
2824 P. Manoranjitham, Middle St. Bd. Ele. School, Alangulam.
2825 S. Mari Ammal Michel, do.
2826 A. Gnanaprakasam, A.M. Hr. Ele. School, Panaikulam.
2827 K. Muthurakku Servai, Bd. Ele. School, S. Kodikulam.
2828 R. K. Sankarier, Bd. Ele. School, Thiru Uthirakosaimangai.
2829 S. Sathiah Pillai, Bd. Ele. School, Pandiyur.
2830 K. M Amiruddin, Bd. Ele. School, Kanjirankudi.

2831 M. Dorairaj, Aided Muslim Ele. School, Puduvalasai.
2832 L. Muthukannan Servai, Bd. Ele. School, Thiru Uthiragosamangai.
2833 S. Savarimuthu, Bd. Ele. School, Teriruveli.
2834 S. Chockkalingam Pillai, Sivaprakasa Aided Ele. School, Karaikudi.
2835 R. Kesavaraju, Bd. Ele. School, Uchipulli.
2836 M. Krishna Pillai, Bd. Ele. School, Kilakarai P.O.
2837 S. Muthurakku Servai, Bd. Ele. Sch., Uchipulli P.O.
2838 R. V. Sundara Raju, Bd. Ele. School, Periapatnam P.O.
2839 Y. Viagulasamy, do.
2840 S. Grace Annathai Ammal, Bd. Girls Ele School, Periyapatnam.
2841 M. Kannammal Beebi, Bd. Ele. Sch., Pudumadam P.O.
2842 V. Theresammal, Bd. Girls Ele. Sch., Pudumadam.
2843 Mary Papathiammal, do.
2844 M. Shaik Kaddar Sahib, Bd. Ele. School, Pudumadam.
2845 A. Ganapathy, Bd. Ele. School, Mariyur.
2846 T. Muthurlapan, Bd. Ele. School, Alangankulam.
2847 T. S. Rengasamy, Rajah's High School, Ramanathapuram.
2848 C. Angel, Hamedia Ele. School, Keelakarai.
2849 T. Devanesan, Bd. Ele. School, Alangankulam.
2850 A. Nagarajan, R.S. Bd. High School, Paramakudi.
2851 S. Amalorpavam, Bd. Hr. Ele. School, Parthibanur.
2852 M Karuppaiah Servai, Bd. Ele. School, Paralai.
2853 M. Subramaniam, Bd. Hr. Ele. School, Parthibanoor.
2854 T. Jayapandian, Muslim Ele. School, Velipatnam.
2855 T Swarnalingam, Bd. Ele. School, Elayankudi.
2856 K. Ramaswami Pillai, Bd. Ele. School, Thoruvaloor.
2857 W. S. Gruzdavid, Bd. Basic Ele. School, Ramanathapuram.
2858 K. Karuppiah, K V. Sala Hr. Ele. School, Virudhunagar.
2859 S. Velusamy Pillai, Nataraja Ele. School, Kavanoor.
2860 R. Paranjothi, do.
2861 S. R. Sundararajan, Bd. Ele. School, Kadambodai.
2862 N. Seeni Ambalakarar, Bd. Ele. Sch., Regunathapuram.
2863 R. Ramadass, Muslim Ele. School, Velipattinam.
2864 C. Chandrasegaran, Bd. Muslim Ele. School, Ekkakudi.
2865 D. Gabrial, Aided Ele. School, Pathiatharavai.
2866 M. Meenakshisundaram, Vinayagar Ele. School, Velipattinam.
2867 V. M. Ganesan, do.
2868 S. Subbiah, Muruganatha Ele. School, Karendal.
2869 P. Ponniah Pillai, Aided Ele. School, Perungulur.
2870 J. Dhaivanayagam Pillai, do.
2871 Sarathangan, Bd. Ele. School, Devipatinam.
2872 F. Rayappan, Aided Ele. School, Ariankadu.
2873 V. Nagalingam, Bd. Ele. School, Sathani.
2874 G. Saraswathy, Hameedya Ele. School, Kilakarai.
2875 V. Valambigai Moorthy, Sethupathy Ele. School, Ramanathapuram.
2876 K. C. Arogyam, Raja Dhinagar R. C. Hr. Ele. School, Ramanathapuram.
2877 S. Gnanaprakasam, Bd. Ele. School, Kaddukai Valasai.
2878 M. Irudaya Mary, R. C. Ele. School, Mattiarendal.
2879 M. Jayamani, A. M. Ele. School, Puduvalasai.
2880 J. Michel, Bd. Ele. School, Alagankulam.
2881 M. Muthuramalingam Pillai, Aided Muslim School, Panaikulam.
2882 Mercy Packiam Nallathai, do.
2883 N. Mangalavinayagam, do.
2884 M. Ponnusamy Servai, North Street, Ramanathapuram.
2885 A. M. Karuppiah, Aided Ele. School, Kooriyur.
2886 S. K. Josaph, Bd. Ele. School, Paramakudi.

Printed by K. S. S. RAJAN at the Jupiter Press, Ltd., 109-C, Mount Road, Madras-18.
Published by The Indian Red Cross Society, Egmore, Madras-8.